**செய்தி வெளியீடு எண் : 1471** **நாள் : 26.08.2022**

**<u>செய்தி வெளியீடு</u>**

# ஈரோட்டில் நடைபெற்ற அரசு விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ரூ.613.51 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (26.8.2022) ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் நடைபெற்ற அரசு விழாவில், ரூ.262 கோடி செலவில் 135 முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கி வைத்து, ரூ.184 கோடி மதிப்பீட்டிலான 1761 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 63,858 பயனாளிகளுக்கு ரூ.167.51 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசு முறை பயணமாக 23.8.2022 அன்று கோயம்புத்தூர் வந்தடைந்து, 24.8.2022 அன்று கோயம்புத்தூரில் அரசு விழாவிலும், 25.8.2022 அன்று திருப்பூரில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் நடைபெற்ற "தோள் கொடுப்போம் தொழில்களுக்கு" திருப்பூர் மண்டல மாநாட்டிலும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். அதனைத் தொடர்ந்து, இன்று ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் நடைபெறும் அரசு விழாவில் கலந்து கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருகை தந்தபோது, சாலையின் இருமருங்கிலும் திரளான பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

**<u>இன்றைய தினம் ஈரோட்டில் நடைபெற்ற மாபெரும் அரசு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இம்மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு திட்டங்களை தொடங்கி வைத்தார். அதன் விவரங்கள்:</u>**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் ரூ19.46 கோடி செலவில் பவானி ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம், கோபிச்செட்டிபாளையம், பெருந்துறை பகுதிகளில் 3 மகளிர் சுயஉதவிக் குழுக் கட்டடங்கள் உள்ளிட்ட 100 பணிகள்;

நிதித்துறையின் சார்பில் கொடுமுடியில் ரூ.1.07 கோடி செலவில் சார்நிலை கருவூலக் கட்டடம், கைத்தறித் துறையின் சார்பில் ரூ.47 இலட்சம் செலவில் சென்னிமலை, சென்குமார் தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் கட்டடத்தை புதுப்பித்து காட்சியறையுடன் கூடிய சில்லறை விற்பனை நிலையம் மற்றும் சரக்கு இருப்பு கிடங்கு, வணிகவரி மற்றும் பதிவுத்துறையின் சார்பில் ரூ.1.01 கோடி செலவில் புஞ்சை புளியம்பட்டியில் கட்டப்பட்டுள்ள சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம்;

ஈரோடு மாநகராட்சியின் சார்பில் ரூ.99.55 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள ஜவுளி வணிக வளாகக் கட்டடம், புதிய வணிக வளாகக் கட்டடம், பசுமைக் கட்டடம் மற்றும் பூங்கா, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் ரூ.113.99 கோடி செலவில் வாரச்சந்தை மேம்பாடு, பேருந்து நிலைய மேம்பாடு, குடிநீர் விநியோக மேம்பாடு, நகர் நல மையம், கூட்டுக்குடிநீர் திட்டப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறையின் சார்பில் ரூ.11.73 கோடி செலவில் பெருந்தலையூர் மேவாணி – தாழைக்கொம்புதூர் சாலையில் சிறுபாலம், அந்தியூர் – நம்பியூர் சாலையில், சுண்டக்காம்பாளையத்தில் சிறுபாலம், புளியம்பட்டி–பவானிசாகர்–பண்ணாரி சாலையில் பவானி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம்;

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் ரூ.50 இலட்சம் செலவில் ஈரோடு கிழக்கு, வாணிப்புத்தூர் மற்றும் சிவகிரி ஆகிய

இடங்களில் குறுவட்ட அளவர் குடியிருப்புகளுடன் கூடிய அலுவலகக் கட்டடங்கள்;

பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் ரூ.1.73 கோடி செலவில் ஊஞ்சலூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் ஆய்வகம், கழிவறை, குடிநீர் இணைப்பு வசதி, சுற்றுச்சுவர் மற்றும் கூடுதல் வகுப்பறைகள், கவுந்தபாடி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் ஆய்வகக் கட்டடம்;

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் சார்பில் ரூ.1.20 கோடி செலவில் பெத்தாம்பாளையம், கஸ்பாபேட்டை மற்றும் செம்மாம்பாளையம் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள கால்நடை மருந்தகக் கட்டடங்கள்;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் ரூ.2.66 கோடி செலவில் ஓங்கல்வாடியில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம், துணை செவிலியர் தங்கும் விடுதி மற்றும் கிராமப்புற சுகாதார பயிற்சி மையக் கட்டடம்;

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் ரூ.3.41 கோடி செலவில் 4 துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள், தாளவாடியில் உழவர் சந்தை, அந்தியூரில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், பர்கூரில் 2 சேமிப்பு கிடங்குகள்;

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் சார்பில் ரூ.4.70 கோடி செலவில் ஊராட்சிக்கோட்டை துணை மின்நிலையத்தில் மின்மாற்றி தரம் உயர்த்துதல் மற்றும் எம்மாம்பூண்டி பகுதியில் புதிய மின்மாற்றி;

கூட்டுறவுத்துறை சார்பில் ரூ.9 இலட்சம் செலவில் ஈரோடு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் சிவகிரி கிளை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய ATM அறை;

என மொத்தம் ரூ.262 கோடி மதிப்பீட்டிலான 135 முடிவுற்ற திட்டப்பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

<u>**மேலும், இவ்விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். அதன் விவரங்கள்:**</u>

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் ரூ.103.44 கோடி மதிப்பீட்டில் பவானிசாகரில் இலங்கை தமிழர்களுக்கான 420 தொகுப்பு வீடுகள், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டப்பணிகள் உள்ளிட்ட 1748 பணிகள், பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் ரூ.1.19 கோடி மதிப்பீட்டில் தேவர்மலை தரம் உயர்த்தப்பட்ட அரசு உயர்நிலைப் பள்ளியில் 3 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் கைக்கோளபாளையம் அரசு உயர்நிலைப் பள்ளியில் 2 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள்;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் ரூ.54 இலட்சம் மதிப்பீட்டில் கொமாரபாளையம் அரசு அண்ணா மருத்துவமனை மற்றும் சென்னிமலை ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் கட்டப்படவுள்ள சித்தா பிரிவு கட்டடங்கள், எழுமாத்தூர் ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் இந்திய சித்தா மருத்துவ சேவை, யோகா மற்றும் இயற்கை மருத்துவத்திற்கான கூடுதல் கட்டடம்;

ஈரோடு மாநகராட்சியின் சார்பில் ரூ.63.50 கோடி மதிப்பீட்டில் சோலார் பகுதியில் புதிய பேருந்து நிலையம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் ரூ.3.31 கோடி மதிப்பீட்டில் அறிவுசார் மையம் மற்றும் உள்நோயாளிகளின் உறவினர்கள் தங்குமிடம்;

வணிகவரி மற்றும் பதிவுத்துறையின் சார்பில் ரூ.1.90 கோடி மதிப்பீட்டில் கோபிச்செட்டிபாளையத்தில் வணிகவரித் துறை அலுவலகக் கட்டடம், கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் ரூ.5.16 கோடி மதிப்பீட்டில் ஈரோடு மற்றும் கோபிச்செட்டிபாளையத்தில் கால்நடை பன்முக மருத்துவமனை கட்டடங்கள், இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் ரூ.93 இலட்சம் மதிப்பீட்டில் சென்னிமலை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் பக்தர்கள் இளைப்பாறும் மண்டபம்;

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் சார்பில் ரூ.3.73 கோடி மதிப்பீட்டில் ஈரோடு அரசினர் தொழிற்பயிற்சி மையத்தில் பணிமனை மற்றும் ஆய்வகக் கட்டடம்;

என மொத்தம் ரூ.184 கோடி மதிப்பீட்டிலான 1761 புதிய திட்டப்பணிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்.

<u>**இவ்விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அதன் விவரங்கள்:**</u>

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகள், நெல், பயறு விதைகள், பேட்டரியில் இயங்கும் விசை தெளிப்பான்கள், நேரடி நெல் விதைப்பு கருவிகள் வழங்குதல், கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் பயனாளிகளுக்கு வெள்ளாடுகள், செம்மறியாடுகள் வழங்குதல், மீன்வளத்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு குளிர்காப்பு பெட்டியுடன் கூடிய இருசக்கர வாகனங்கள், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகள், முதலமைச்சரின் பெண் குழந்தைகள் திட்டத்தின் கீழ் நிதியுதவி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்

துறை சார்பில் பயனாளிகளுக்கு பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ் நிதியுதவி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் பயனாளிகளுக்கு இயற்கை மரண உதவித் தொகை, விதவை உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, மகளிர் திட்டத்தின் கீழ் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு நிதியுதவி, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் பயனாளிகளுக்கு பெட்ரோல் ஸ்கூட்டர், பேட்டரியால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலி, தையல் இயந்திரம், காதொலி கருவி, திறன்பேசி, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் பயனாளிகளுக்கு அடுக்குமாடி குடியிருப்புக்கான ஒதுக்கீட்டு ஆணைகள், தாட்கோ சார்பில் தொழில் முனைவோர் திட்ட மானிய நிதி என பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் 63,858 பயனாளிகளுக்கு ரூ.167.51 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

முன்னதாக, ஈரோட்டில் நடைபெற்ற அரசு விழாவில் பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. அந்தியூர் செல்வராஜ், திரு. அ. கணேசமூர்த்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஏ.ஜி. வெங்கடாசலம், திரு. இ. திருமகன் ஈவெரா, திரு. இ.ஆர். ஈஸ்வரன், ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி எஸ். நாகரத்தினம், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஹெச். கிருஷ்ணனுண்ணி, இ.ஆ.ப., கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி)

**திரு.எல். மதுபாலன், இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ச. சந்தோஷினி சந்திரா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.**

.........

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in